## 16.4 ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதியிலிருந்து கட்டிடங்கள், சாலைகள், ஏரிகள் போன்ற பராமரிப்பு பணிகள் எடுத்து செய்தல் குறித்து தெளிவுரைகள்

---

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
ஊரக வளர்ச்சி இயக்குநர்
சென்னை–15

ந.க.எண் 2205/98/திட்டமிடல்–II நாள் 09.01.98

**சுற்றறிக்கை**

பொருள் : ஊராட்சி ஒன்றியங்கள் – ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதியிலிருந்து பராமரிப்பு பணிகள் கட்டிடங்கள் சாலைகள், ஏரிகள் போன்ற பராமரிப்பு பணிகள் எடுத்து செய்தல் – தொடர்பாக தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.

பார்வை
1) அரசு ஆணை (நிலை) எண் 229 ஊரக வளர்ச்சித்துறை நாள் 15.10.96.
2) அரசு ஆணை (நிலை) எண் 4 ஊரக வளர்ச்சித்துறை நாள் 03.01.97.
3) அரசு ஆணை (நிலை) எண் 990 ஊரக வளர்ச்சித்துறை நாள் 14.12.90.
4) அரசு ஆணை (நிலை) எண் 22 ஊரக வளர்ச்சித்துறை நாள் 22.01.97.

ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்வது குறித்து பல்வேறு விளக்கங்கள் கேட்டு கடிதங்கள் வரப்பெறுகின்றன. அவற்றை பரிசீலித்து கீழ்கண்டவாறு தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.

**அ) மூலதனப்பணிகள்**

பார்வை 2 ல் காணும் அரசாணையில் பொதுநிதியின் உபரியிலிருந்து மேற்கொள்ளப்படும் மூலதனப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் அரசால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரம்பு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | ரூ. 5. லட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. மாவட்ட ஆட்சித்தலைவர் |
| 2. | ரூ. 5. லட்சத்திற்கு முதல் ரூ. 10.00 லட்சங்கள் வரை செலவாகக்கூடிய தனியானபணிகளுக்கு | .. ஊரக வளர்ச்சி இயக்குநர் |
| 3. | ரூ. 10. லட்சங்களுக்கு மேல் செலவாகக்கூடிய தனியானபணிகளுக்கு | .. அரசு |

பார்வை 1–ல் காணும் அரசாணையில் கீழ்கண்ட பணிகள் மட்டுமே ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் உபரியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

1. குடிநீர் விநியோகம் சம்மந்தப்பட்ட பணி.

2. பள்ளிக்கட்டிடங்கள்

3. சாலைப்பணிகள் (பாலங்கள், சிறுபாலங்கள், தரைபாலங்கள் (முதலியன உள்பட) மற்றும்

4. ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சிறுபாசன ஏரிகள் குறித்த பணிகள்.

இந்தப்பணிகளை தவிர்த்து வேறு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பின் ஊரக வளர்ச்சி இயக்குநரின் முன் அனுமதி கண்டிப்பாக பெறப்பட வேண்டும்.

**(ஆ) பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள்**

ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கட்டிடங்கள், சாலைகள், சிறுபாசன ஏரிகள் முதலியன பராமரிப்பு செய்ய பணிகள் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்போது அவற்றிற்கான நிர்வாக அனுமதி கோரி கருத்துருக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பப்படுகின்றன. இது தேவையற்றது, ஏனெனில் பார்வை 1 மற்றும் 2 ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள உத்திரவுகள் மூலதன பணிகளுக்கு மட்டுமே பொருந்தும். பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு பொருந்தாது. பொதுநிதியிலிருந்து பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஊராட்சி ஒன்றியங்களே ஒன்றியகுழுவின் முன் அனுமதி பெற்று செய்யலாம்.

# 16. GENERAL FUND WORKS

மேலும், பார்வை 3–ல் காணும் அரசாணையில் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தை பராமரிப்பு செய்ய ரூ. 25,000/– க்கு மிகாமல் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம் என ஆணையிடப்பட்டிருந்தது. ஆனால் பார்வை 4 ல் காணும் அரசாணையின்படி ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடங்களை பராமரிக்க வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

எனவே கட்டிடங்கள் (ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் உட்பட) சாலைகள், சிறுபாசன ஏரிகள் முதலியன சம்மந்தப்பட்ட பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகள் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மேற்கொள்வது குறித்து கீழ்கண்ட தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. ஊராட்சி ஒன்றிய குழுவே இப்பணிகளுக்கு அனுமதி வழங்கலாம்.
2. ஊராட்சி ஒன்றியக்குழுவின் முன் அனுமதி பெற்ற பிறகுதான் இப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளரோ அல்லது ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவரோ இதற்கு முன் அனுமதி வழங்க இயலாது.
3. ஊராட்சி ஒன்றிய ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கு உட்பட்டு இச்செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்சொன்ன தெளிவுரைகள் ஊராட்சி ஒன்றிய கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பள்ளிக்கட்டிடங்களின் பராமரிப்பு பணிகளுக்கும் பொருந்தும்.

இந்த தெளிவுரையை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதை ஊராட்சி ஒன்றியத்தின் குழுக்கூட்டத்தில் வைத்து அனைத்து உறுப்பினர்களின் கவனத்திற்கும் கொண்டு வர வேண்டும். மேற்கூறிய தெளிவுரைகள் தவறாது கடைப்பிடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஊரக வளர்ச்சி இயக்குநர்

பெறுநர்

அனைத்து ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள்